நவீனக்கல்வி

மலர்-1 இதழ்

செப்டம்பர்
1938

JL
T:3m211b,N23NK
N33.1.3
148785

1386

327

"செய்து செய்து கற்றல்"

# நவீனக் கல்வி

OFFICE OF THE REGISTRAR ... 18 SEP 1938 MADRAS

மலர் 1] செப்டம்பர் 1938 [இதழ் 3

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாலர் பஜனை | 1 |
| 2. | பிராஜெக்ட் பள்ளிக்கூடம் | 2 |
| 3. | கைத்தொழிற் கல்வி | 4 |
| 4. | வார்தா கல்வித்திட்டம் (முன்தொடர்ச்சி) | 7 |
| 5. | இராட்டையினுல் நூல் நூற்றல் பிராஜெக்ட் | 10 |
| 6. | பழைய மாணவர் சங்கம் | 18 |

# இப்பத்திரிகையின் நோக்கம்.

ஈரோடு லண்டன் மிஷன் சமூக போதனாமுறைப் பாடசாலையில் பயின்றுவந்த ஆசிரியர் எல்லோரும் தாங்கள் கற்றுக்கொண்ட முறையை யனுசரித்துப் பாடசாலை நடத்தும்படி அவர்களை ஏவிவிடவேண்டும் என்னும் நோக்கங்கொண்டு இச்சிறு பத்திரிகை வெளியிடப்பட்டது. ஆசிரியர்க்குத் தக்க உதவிபுரியவும், அவர்களுக்குப் புதிய ஊக்கம் உண்டாக்கவும் வேண்டுமென்று விருப்பமுற்று இப்பத்திரிகை வெளியிட்டோம்.

புதிய பிராஜெக்ட் அட்டவணைகளையும் அதற்கேற்ற சில ஆலோசனைகளையும் ஆசிரியர் இதில் காணலாம். நமது பழைய மாணவர் யாவரும் இச்சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளச் சந்தாதாரராவார்கள் என்று நம்புகிறோம். இதற்கென்றே ஒரு பிரத்தியேகமான கடிதம் இத்துடன் அனுப்பியிருக்கிறோம். இதைப் பூர்த்தி செய்து 6 அணா ஸ்டாம்பு வைத்துக் கீழ்க்கண்டவரிடம் அனுப்பினால் அவர்கள் ஒரு வருஷத்திற்குப் பத்திரிகை பெற்று பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்தினராதல் கூடும். வாசிக்கும் ஆசிரியர் யாவரும் இவ்வாறே செய்து தங்கள் பழைய பாடசாலையின் ஆசிரியர்களை மகிழ்விப்பார்களென நம்புகிறோம்.

# ஏழை மாணவர் சங்கம் ஈரோடு

ஷை சங்கமானது தாழ்த்தப்பட்ட ஏழைமக்களின் முன்னேற்றத்தைக் கருதி வேலைசெய்து கொண்டு வருகிறது. பக்கத்திலுள்ள சேரிகளில் மூடப் பழக்க வழக்கங்களைப் போக்கவும், அறிவு வளர்ச்சியை உண்டுபண்ணவும், பல பெரியோர்களாகிய சங்கை **Rev. H. A.** பாப்லி **B A., ஸ்ரீ. E. P.** வெங்கடாசலம் ஸ்ரீ **F. S.** கணபதி சுப்ரமண்ய ஐயர் **B. A., B. L.; T. J.** வேதமாணிக்கம் முதலியவர்களைக் கொண்டு காலக்ஷேபம், நல்லுபதேசம், ஒளிச்சித்திரப் படங்கள் முதலியன நடத்தப்பட்டு வருகின்றது. யாவரும் இதற்குக் கூடுமான உதவி செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**R.** வேதமுத்து, காரியதரிசி.
**G.** ஜான் ஐசக்
**D.** தவமணி

(327)
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1938
MADRAS

# பாலர் பஜனை

"பனைமரத்தைப் பாருங்கள்" என்றபடி

இராகம். இந்துஸ்தான் பியாகு. ஆதிதாளம்.

1 டமர டமர டங்கரடம்
டமர டமர டிங்கரடிம்
டமர டமர டங்கரடம்
டமர டமர டிங்கரடிம்— டமர

2 சாமி பூஜை நடக்குதே
சங்குநாதம் முழங்குதே
பூ — பூ — பூ — பும்
பு — பு — பு — பும்-— டமர

3 தாளச் சத்தம் கேட்குதே
தங்கையே நீ பாடுவாய்
ஜல்லர, ஜல்லர, ஜல்லர, ஜல்
ஜல்லர, ஜல்லர, ஜல்லர, ஜல்— டமர

4 பக்தரின் பஜனை போகுதே
மத்தள சத்தம் கேட்குதே
தமுக்கு, தமுக்கு, தமுக்கு, தம்
திமிக்கு, திமிக்கு, திமிக்கு, திம்— டமர

5 மணியின் சத்தம் கேட்குதே
மனதைக் குளிரச் செய்யுதே
கிண்கிணி, கிண்கிணி, கிண்கிணி, கிண்
கிண்கிணி, கிண்கிணி, கிண்கிணி, கிண்—டமர

JL
T:3 M2116, N23NK
N33.1.3
148785
சென்னை-600 008



# Project School

By

R. Vethamuthu.

சுய நோக்க முயற்சி பாடசாலையைப்பற்றித் தங்களுக்குத் தெரிய வேண்டியது அவசியம். ஏனெனில் சுய நோக்க முயற்சிப் பாடசாலை என்றால் என்ன? அங்கு எப்படிக் கற்கிறார்கள் என்ற சந்தேகம் அநேகருக்குண்டு. பாடசாலை என்றால் ஒரு உபாத்தியாயர் பிள்ளைகள் யாவரும் கூடி குறிக்கப்பட்ட பாடத்தைக கூசாமல் மனனம் செய்வதல்ல, சகலவிதமான அறிவையும் பெற்றுக் கொள்வதோடு, சகல குணங்களும் வளர வேண்டும். ஒரு குழந்தையின் மனித லக்ஷணங்கள் அனைத்தையும் ஒழுங்கு படுத்துவதே கல்வியாகும். ஒவ்வொரு குழந்தையும் தன் தினசரி ஜீவியத்தில் ஏழுவித ஜீவியங்கள் செய்கிறதென்று சொல்லலாம்.

1. சரீர வளர்ச்சிக்கு ஏதுவான ஜீவியம்
2. மன வளர்ச்சிக்கு ஏதுவான ஜீவியம்.
3. சன்மார்க்கத்திற் கேதுவான ஜீவியம்.
4. சமுதாயத்திற் கேதுவான ஜீவியம்.
5. ராஜ்யத்திற் கேதுவான ஜீவியம்.
6. பகுத்தறிவுக் கேதுவான ஜீவியம்.
7. ஆவியின் பிரகார வளர்ச்சிக்கு ஏதுவான ஜீவியம்.

ஆக ஏழுவிதமான ஜீவியமும் சரிவர நடத்த உதவி செய்ய வேண்டும். இவ்விதமான ஜீவியத்தை வீடு, பாடசாலை, விளையாடுமிடம், கோவில், சமுதாயம், சேர்க்கை, தன் சொந்த சுயேச்சை ஆக இவ்விடங்களில தன் ஜீவியத்தை வளர்க்க ஏதுவாகிறது.

இவ்விதமாக ஜீவித்துத் தன் சுய அனுபவம் அடைவதே குழந்தைகளின் சுய இச்சை. அதுவே இயற்கை இவ்விடங்களில் நன்மையோ தீமையோ அடைகிறது. ஆகவே இவைகளையெல்லாம் அனுசரித்து அதற்கேற்றவாறு நல்ல வழியில் குழந்தைகளை நன்மையான துறையில் பழக்கப்படுவதே சுய நோக்க முயற்சிப் பாடசாலையின் முக்கிய நோக்கம்.

(327)



இவ்விதம் வளர்வதற்கு மூலதாரமாயிருப்பது குழந்தைகளின் மனசாக்ஷி. அதாவது அதன் ஆசையே அதற்குக் காரணம் என்று சொல்லலாம். இந்த ஆசையை நல்ல வழியில் செல்ல தூண்டிவிடுவதே சுயநோக்க முயற்சிப் பாடசாலையில் உபாத்தியாயர் செய்யும் பெரியவேலை. குழந்தைகள் யாவரும் விரும்பும் ஓர் விளையாட்டு, அல்லது ஓர் களிமண் வேலை, அல்லது படம் வரைதல், அல்லது தோட்டம் போடுதல் ஆக ஏதாவது குழந்தைகளுக்கு ஆசையான ஓர் வேலையை எடுத்து அதன் மூலமாக மேலே குறிப்பிட்டபடி சகல ஜீவிய வளர்ச்சியையும் நன்மையான வழியில் செல்லப் பழக்குதல் முக்கிய நோக்கம். இவ்விதமாகப் பிள்ளைகள் ஆசைப்பட்ட ஓர் வேலையை முடிக்கும் வரை அவர்கள் சந்தோஷம் முடியாது. வேலை முடியும்வரை வெகு ஆத்திரமாகவும், ஆவலாகவும், ஊக்கத்தோடும், வேலையைச் செய்யவும், அவ்வேலைக்கு உதவியான விஷயங்களை ஆராயவும் பலரிடம் யோசனை கேட்கவும். பலரின் உதவிக்காக முயற்சிக்கவும், தாங்களே தைரியமாய்ச் செய்யலாம் என்றும், எல்லோரும் ஒற்றுமையோடு செய்யலாமென்றும், சரீரப் பிரயாசையும், மனப் பிரயாசையும் அதிகமாக ஊன்றிச் செலுத்துகிறார்கள். இவ்வித முயற்சியும் ஆசையும் அதிகரித்திருக்கும் குழந்தைகள் அந்த சமயம் பாடங்களையும், நல்ல அறிவையும், ஆராய்ந்து அறிந்து கொள்ளுகிறது. என்ன கஷ்டமாயிருந்தாலும் தங்கள் நோக்கமே பெரிதென்று எல்லாப் பாடங்களையும் இலேசாகக் கற்றுக் கொள்ளுகிறது. கைத்தொழிலும் பூரணமாய்க் கற்றுக் கொள்ளுகிறார்கள். இவ்விதமாகக் குழந்தைகளின் சுய ஆசையை ஒட்டியே சுயநோக்க முயற்சிப் பாடசாலை நடந்து வருகிறது.

இவ்விதம் நடப்பதால் குழந்தைகளுக்கு பாடங்களும், கைத்தொழிலும், நல்ல எண்ணங்களும் வளர்கின்றன. எடுத்த வேலை முடியுமவரை அதிலிருந்து உதித்து வரும் பாடங்களைக் குழந்தைகளின் ஆசைக்குத்தக்கவாறு கற்பிக்கப்பல முறைகளையும் உபயோகித்துப் பாடங்களைக்கற்பிக்கப் படுகிறது. இதனால் பிள்ளைகளின் ஆசையையொட்டிய பாடசாலையாக இருக்கிறது. பிள்ளைகளுக்கும் தற்கால ஜீவியத்திற்கும் ஒட்டிய முறையாகவும் இருக்கிறது.

இவ்விதமாக வேலையின் மூலமாய்ப் படிப்பும், கைத்தொழில் அபிவிருத்தியும் ஏற்படுவதோடு கீழ் கண்ட குணங்களிலும் அப்பியாசப்படுத்தப்படுகிறார்கள். அதாவது பக்தி, சுத்தம் சிநேகம், கீழ்ப்படிதல், பரோபகாரம், ஜீவகாருண்யம, உதவி, மரியாதை, நாணயம், தாழ்மை, சுறுசுறுப்பு, ஒற்றுமை அனுதாபம், தர்மம், உழைப்பு, ஜனசமுதாயவேலை, சந்தோஷம், பரிதா

ப்படல், சமர்தானம், உண்மை. ஒழுக்கம், பொறுமை, அடக்கம், முதலிய குணங்களையும் பழக்கப்படுத்த சவகாசமும், கொடுக்கப்படுகிறது.

இவ்விதமாக சுயநோக்க முயற்சிப் பாடசாலை ஓர் வேலையின் மூலமாய்ப் பாடங்களையும் குணங்களையும் அந்தந்த வகுப்புக்குத் தகுந்தவாறு பழக்கிக்கொண்டு வருகிறதென்பதை அறியவும்.

சுயநோக்க முயற்சி முறை சுடர் விட்டோங்குக.

சுபம்! சுபம்!! சுபம்!!

---

# கைத்தொழில் கல்வி

J. E பவுல்

சாதாரணமாகக் கைத்தொழில் எல்லாப் பாடசாலைகளிலும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆனால் கைத்தொழிலுக்கு விசேஷ இடம் கொடுக்கப் படவில்லை. புஸ்தகப் படிப்புக்குத்தான் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. வெறும் புஸ்தகப் படிப்பைவிட கைத்தொழில் கல்வி நன்கு போதிக்கப்பட்டால் இப்போதைய மாணவர்களுக்கு பிற்கால ஜீவியத்தில் அதிக நன்மை பயக்கக் கூடியதாக விருக்கும். தற்சமயம் நம் நாட்டில் படிப்பு முடித்து உலகத்தில் பிரவேசித்துள்ள மாணவர்களில் நூற்றுக்கு அறுபது பேருக்கு மேல் வேலையின்றி வீணே காலத்தைக் கழிக்கின்றனர். ஏதேனும் ஒருவேலையைச் செய்து தம் வயிற்றை வளர்ப்பது கேவலமாக எண்ணப்படுகிறது. அவ்விதமான பான்மையைப் புகுத்தியது பாரம்பரை கல்வி முறையே. ஆகவே கைத்தொழில் கல்விக்கு நாம் விசேஷ இடம் கொடுத்து மாணவர்களைப் பிற்காலத்தில் தொழிலாளிகளாகவிருந்து, ஜீவியம் நடத்தவும், வீண் பொழுது போக்கி, சோம்பேறிகளாயிராதபடி செய்வது முக்கியமாகும்.

பாரம்பரைக் கல்வித்திட்டத்தின் பிரகாரம் கைத்தொழிலுக்கு பாடசாலைகளில் சிறிது நேரம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு விசேஷ இடம் அளிக்கப்படவில்லை. இதன் காரணமாக மாணவர்கள் அந்த நேரத்தை வீணாக விளையாட்டில் கழித்து வருகிறார்கள். கைத்தொழில் உபாத்திமார்



களும் ஏனோ தானோவென்று விட்டுவிடுகின்றனர். முக்கியமாக மற்றப் பாடங்களுக்குச் செலுத்தும் கவனத்தைவிட இதற்கு குறைவாகவே கவனம் செலுத்துகிறார்கள். இம்முறையில் புஸ்தக அறிவுதான் விசேஷமுள்ளதாகக் கருதப்படுகிறது. இம் முறையில் பயின்ற ஓர் மாணவன் பாடசாலை விட்ட முதல் வருடத்திலேயே, ஏதேனும் தான் கற்ற கைத்தொழிலைச் செய்ய சொன்னால் விழிக்கத்தான் தெரியும். மற்றவரின் கையை ஏந்தி பிழைக்கவேயன்றி தான் சுயேச்சையாக ஓர் வேலை செய்து தன் பிழைப்பை நடத்த சக்தியற்றவனாகிவிடுகிறான். படித்த ஒருவன் தான் மனதில் நினைத்த, கௌரவமாகக் கருதும் உத்தியோகத்தை விரும்புகிறானே ஒழிய, ஓர் தொழிலைச் செய்து பிழைக்க அஞ்சுகிறான். அதைக் கேவலமாகவும் எண்ணுகிறான். தான் கோரிய வேலை கிடைக்கும்வரையில் பட்டினி கிடக்கவும் முன் வருகிறான். எனவே மாணவர்களுக்குக் கைத் தொழிலிடத்து இருக்கும் வெறுப்பையும் தாழ்மையையும் நீக்கி கைத்தொழிலின் மேன்மையை எடுத்துக்காட்டி, இந்திய மக்களுக்கு உபயோகமான முறையில் கைத்தொழிலைப் பயன்படச் செய்து வைப்பதே தற்போதுள்ள கல்வியின் விசேஷமாகும்.

நாம் தெரிந்துகொள்ளும் கைத்தொழில் நம் இந்தியர்களின் தினசரி ஜீவியத்தில் பிரயோஜனமுள்ளதாக இருத்தல் வேண்டும். கைத்தொழில் மூலமாய்க் கல்வி அறிவு அடைதல் வெறும் புஸ்தக படிப்பைவிட அதிக நன்மை பயக்கும் என்பதற்கு சந்தேகமில்லை. எப்படியெனில் இதன் பிரகாரம் பாடசாலையில் பயிலும் மாணவர்கள் தங்கள் தினசரி வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களை தாங்களே பள்ளியில் செய்து பழகுகிறார்கள். இவைகளை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்.

(1) உடை (2) ஆகாரம் (3) நமக்கு அவசியமான பொருட்கள். பாடசாலைகளில் மாணவர்கள் பருத்திப் பஞ்சு எடுத்து தக்ளி, ராட்டை, முதலியவற்றால் நூற்கப் பழக்கப்படுவது நாளடைவில் ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் விடாது நூற்கும் பையன் அநேகமாய் வருஷக் கடைசியில் தனக்கு இரண்டு வேஷ்டிகளுக்கும் இரண்டு துண்டுகளுக்கும் போதிய நூல் தானே நூற்றுவிடுகிறான். படிப்பு முடித்தபின் தன் வீட்டிலுள்ள மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்து இத்தொழிலை விருத்தி செய்தால்தான் வேறு உத்தியோகம் செய்து பிழைக்க அவசியம் ஏற்படாது. இந்தியா ஒரு விவசாயநாடு, நமக்கு வருடத்தில் 8மாதந்தான் விவசாய வேலைகள் உண்டு. மீதியான நான்கு மாதத்தில் உல்லாசமாக வீணில் கழிப்பதைவிட அந்நேரத்தையும் லாபகரமான முறையில் உபயோகப்படுத்துவது குடும்பங்களுக்கும்

உபயோமாக இருக்கும். கோரைப் பாய் பின்னல், கூடைமுடைதல், புஸ்தகம் கட்டுதல், எழுதும் அட்டைகள் செய்தல் முதலியவைகள் ஓய்வு நேரங்களில் செய்யும்படி லாபகரமான தொழில்கள். மாணவர்கள் கைத்தொழிலை நன்கு மதித்து ஊக்கத்துடன் செய்வார்களேயானால் அவர்களின் பிற்கால ஜீவியம் மிகவும் சந்தோஷமாயிக்கும் என்பது நாளடைவில் தெரியவரும்

பாடசாலையில் தனியாக விவசாயத் தொழில் கற்பிப்பது அதிக நன்மையளிக்கும். பெற்றோர்களுக்கு தாங்கள் கையாடி வரும் நல்ல முறைகளை பிள்ளைகள் போதிக்கத் தகுந்த சந்தர்ப்பம் இருக்கிறது.

ஆகவே தொழிற் கல்வியை விசேஷமாகப் பாடசாலைகளில் போதிப்போமாயின் நம் நாட்டில் வேலை இல்லை என்ற ஓலம் ஓடி இந்தியமக்களாகிய நாம் மற்ற நாட்டாரைப்போல் சந்தோஷமாய் வாழ இடமளிக்கும் என்பது நிச்சயம். தொழிற்கல்வியால் தற்போதய மாணவர்கள் பிற்கால வாழ்வை இன்பமாக நடத்த உபயோகமாகின்றது.

இவைகளை உற்று நோக்குங்கால் கைத்தொழிற் கல்விக்கு விசேஷ இடம் கொடுத்து பாடசாலைகளில் நடத்தி நம் இந்திய மக்களுக்கு நல்வழியைக்காட்டுவது நம் பாடசாலைகள் செய்ய வேண்டிய முக்கிய கடமையாகும்.

பழக்க வழக்கங்களுக்கு அடிமையாயில்லாமல் தொழில் செய்து பிழைப்பதைக் கௌரவமாகக் கருதவேண்டும்.

கைத்தொழிற் கல்வியே சிறந்ததாகும்.



# வார்தா கல்வித்திட்டம்

## கல்வித் திட்டத்திற்குரிய ஆசிரியர்கள்

[முன் தொடர்ச்சி]

**K. J. Vethamuthu.**

சாதாரணக் கல்வியிலும் உபாத்தியாயரைப் பொறுத்தே கல்வியின் தன்மை இருப்பதால் புதிய முறையில் உபாத்தியாயர் சரியான பயிற்சி உடையவராக இருக்கவேண்டும்.

ஆகவே புதிய கல்வித் திட்டத்தில் உபாத்தியாயர்களாக வருபவர்கள், கல்வியில் சம்மந்தப்பட்ட விஷயங்கள், அதில் உத்தேசிக்கும் விவரங்கள். தெரிந்திருப்பது மல்லாமல் புதிய திட்டத்தைக் கொண்டு செலுத்தும் உட்சாகம் ஊக்கம் அவர்களுக்கு இருக்கவேண்டும்.

கொழில் மூலம் பாடம் கற்பிக்க வேண்டியிருப்பதால் சில அடிப்படைக் கைத்தொழில்களின் அறிவு வேண்டும்.

புதிய திட்டத்தில் போதனை முழுவதும் மாறுபட்டிருக்கும், எல்லாப்பாடங்களும் வாழ்க்கை, படிப்பு, உழைப்பு மூன்றுடன் சம்பந்தப்பட்டிருக்க பழைய முறையைத் தள்ளி புதிய முறையைக் கையாள வேண்டும்.

உபாத்தியாயர் சமூக வாழ்க்கையின் சம்பந்தமான விஷயங்களில் முயற்சி, சிரத்தை காட்ட வேண்டும.

புதிய கல்வித்திட்டம் சரியாக நடத்த உபாத்தியாயர் அறிவு வளர்ச்சிக்கு அவருக்குப்போதிய பயிற்சி அவசியம். இக்கல்வித் திட்டத்தில் வேலை செய்கிற ஆசிரியர் மெட்ரிகுலேஷன் அல்லது ஸ்கூல் பைனல் படித்து 3 வருட உபாத்தியாயர் வேலையில் அநுபவம் இருக்கவேண்டும்.

### உபாத்தியாயர் பயிற்சிக்குத் திட்டம்

### மூன்று வருடப்பயிற்சி

1. (a) பருத்தி விளைவித்தல், பொறுக்குதல், பஞ்சு அரைத்தல் பட்டை போடல், நூல் நூற்றல், பாவு ஓடுதல்.
   (b) கைராட்டின அமைப்பு. (வேறு தொழில் செய்தால் அதன் கருவிகள்).
   (c) கிராமத் தொழில் பொருளாதார அறிவு.
   (d) சிறு தச்சுவேலை. (எடுத்துக் கொண்ட கைத்தொழில் ஒட்டியதாக).

## பின்வரும் அடிப்படைத் தொழில்களில் ஏதாவது ஒன்றில் பயிற்சி

2. (a) நூற்றல் நெசவு.
   (b) விவசாயம்.
   (c) காய் கறி, பழத்தோட்டம் போடல்.
   (d) தச்சு வேலை.
   (e) விளையாட்டுச் சாமான் செய்தல்.
   (f) தோல் வேலைகள்.
   (g) காகிதம் செய்தல்· (இடத்திற்குத்தக்க வேறு தொழில்]

## கல்விக் கொள்கைகளில் இந்த விஷயங்களையும் சேர்க்க

3. [a] உற்பத்திக்கான உழைப்பின் மூலம் கல்வி போதிப்பது.
   [b] பள்ளிக்கூடத்திற்கும் சமூகத்திற்கும் தொடர்பு.
   [c] குழந்தைகளின் மன அமைப்பு புதிய வல்லமை அடையும் மனோதத்துவம்.
   (b) திட்டம் விடுத்து உருவகப் படுத்தும் போதனுமுறை.
   (e) இத்தேச வாழ்க்கை நிலை வாழ்க்கையைப் பொறுத்துக் கல்வித்திட்டம்.

4. உடலமைப்பு சாஸ்திரம், சுகாதார விஷயம் யாவும் காரியத்தில் பயன்படக்கூடியதுதான் முக்கியம்.

5· சமூக விஷயங்களைப்பற்றி முன்னிருந்ததும் இப்போது இருந்து வருகிறதும் ஆசிரியர் கவனித்து சமூகவளர்ச்சி மாறுதல் முதலியவற்றை ஆசிரியர் கற்றுக்கொள்ளவேண்டும்.

6. ஹிந்துஸ்தானி பாஷையை ஹிந்தி, உர்து ஆகிய இரு பாஷைகளின் எழுத்துகளில் படிக்கவும் எழுதவும் தெரியவேண்டும். உபாத்தியாயர் கட்டாயம் ஹிந்துஸ்தானி படித்திருக்க வேண்டும்.

7. கரும்பலகையில் எழுதவும், சித்திரம் வரையவும் தெரிய வேண்டும்.

8. தேகாப்பியாசம், விளையாட்டுகள்.

9. உபாத்தியாயர் பயிற்சி வேலையில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பரஸ்பரம் நெருங்கி விடுதிகளில் ஜீவித்து வருவதால் தனித்திறமை, அவரவர் ருசிக்கேற்ற தொழில் கற்க ஏதுவாகும். இவை எல்லாம் எவ்வளவு உற்சாகமாகவும் ஊக்கமுமாய் நடக்கிறதோ அவ்வளவுதான் பயிற்சியினால் சரியான வெற்றியும் பலனும் கிடைக்கும்.



இந்தப் பாடத்திட்டம் ஒரு பழுவான திட்டம் என்று நினைக்கக் கூடாது. சரியான மனந்தான் காரணம். இதுவும் 3 வருடத்தில் அனுசரிக்கவேண்டிய திட்டம்.

இந்தப்புதுத்திட்டப் பிரகாரம் 7 வருடம் படித்த ஒருவர் உபாத்தியாயர் பயிற்சிக்கு வரும்போது பாடம் அதிகம் இராது உபாத்தியாயர் எவ்வாறு பாடத்தைப்போதிப்பது என்ற ஞானத்தைமாத்திரம் போதனை முறைப் பாடசாலையில் கற்க வேண்டும்.

இந்தத்திட்டம் மகா பாண்டித்தியமுள்ள ஆசிரியர்களை உண்டாக்கும் நோக்கத்தைக் கொண்டதல்ல, திறமையும் அறிவும், உழைப்பாளிகளான புதிய மனமுள்ள ஆசிரியர்களைத் தயாரிப்பதே இதன் நோக்கம்.

## தாமதத்தை நீக்க

குறைந்த காலத்திற்குள் பயிற்சி அளிப்பதற்கு ஒரு திட்டம்.

இது கூடிய சீக்கிரம் அமுலுக்கு வர, சில பள்ளிக்கூடங்களிலிருந்தும் ஆசிரமங்களிலிருந்தும் கொஞ்சம் ஆசிரியரைப் பொறுக்கி அவர்களுக்கு ஒரு வருடப் பயிற்சி அளிக்கலாம். அவ்வாறு பொறுக்கப்படும் ஆசிரியர்கள் முன்னதாகவே உபாத்தியாயர் வேலையில் அனுபவமுள்ளவர்களாக இருக்கவேண்டும் அல்லது தொழில் பயிற்சி அவருக்கு இருக்கவேண்டும்.

## இவர்கள் பயிற்சியின் பாடத்திட்டம்

[a] பஞ்சு வெட்டல், தக்ளியில் நூல் நூற்றல்.
[நூல் நூற்றல் கட்டாயம் வேறு ஏதாவது அடிப்படைத் தொழில்]
[b] முதல் மூன்று வருடப் படிப்புக்குத்தக்க போதனை செய்யத்தக்கப்பயிற்சி அடைய வேண்டும்.
[c] உடலமைப்பு சாஸ்திரம், சுகாதார சாஸ்திரம், உணவு முதலிய அறிவு.
[d] தொழில் பள்ளிக்கூட அடிப்படைக் கொள்கைகள். அது சமூகத்திற்குள்ள சம்பந்தம்.
[e] கைத்தொழில், வாழ்க்கை, படிப்பு மூன்றுக்கும் பரஸ்பர சம்பந்தமுள்ள வகையில் கல்வி புகட்ட ஒரு திட்டம் வகுத்து உருவகப்படுத்தல்.
[f] இந்திய தேசீயக் கிளர்ச்சியின் சரித்திரம், இந்நூற்றாண்டின் முக்கிய சம்பவங்கள்.
[g] பள்ளிக்கூடத்தில் பரீட்சார்த்தமாக 25 பாடம் சொல்லிக்கொடுத்தல்.

# இராட்டையினால் நூல் நூற்றல்.

## 4, 5 வகுப்புகளுக்கு

### Purposing Stage

வகுப்பிலுள்ள பிள்ளைகளில் யார் யார் முதல் நாள் நடந்த காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்றிருந்தீர்கள் என்று கேட்டல். கூட்டத்தில் யார் யார் எதைபபற்றிப் பேசினார்கள் என்று கேட்கும்போது கல்வி மந்திரியாகிய பண்டிதர் சுப்பராயன் அவர்கள் கூட்டத்திற்கு வந்து மந்திரிகள் செய்த வேலையைப்பற்றிச் சொல்லிவிட்டு, நம் தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் எல்லோரும் சுதேச அபிமானிகளாக இருக்கவேண்டும் என்றும் அதற்காக நாம் எல்லோரும் தேசபக்தியைக் காட்டவும் ஏழைகளை ஆதரிக்கவும், கதர் அணிய வேண்டுமென்றும் அயல் நாட்டின் முன்னேற்றத்திற்குக் காந்தியடிகளின் நன் முயற்சிகளை எடுத்துக் கூறியதாகக் கூறல்.

இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி சாமான்கள் இந்தியாவின் மூலப்பொருள் மூலம் அயல் நாட்டின் சாமான்கள் உற்பத்தியாகி நம் நாட்டில் இறங்குவதாலும் இது விஷயமாக காந்தியடிகளின் அபிப்பிராயம்.

காந்தியடிகளின் ஜீவிய சரித்திரம். காங்கிரஸ் டைரியிலிருந்து மேற்கோள்கள் சிலவற்றை எடுத்தல்.

கதரின் சரித்திரம், உன்னத நிலை, வீழ்ச்சி, காரணம், நீக்கமுயற்சி, வார்தா கல்வித்திட்டத்தின் கோட்பாடுகள்

மேலே சொன்னவைகளை நன்கு அறிந்து கதர் உற்பத்தி செய்வதைச் சுய நோக்கமாகக் கொண்டு அதற்கு உபாத்தியாயரின் சம்மதமும் பெறல்.

**4th Std.** தேசபரிபாலனம்:— மந்திரிமார்களின் வேலைகளைப் பற்றித் தர்க்கித்தல்.

தமிழ்:— சம்பாஷணை முதல் நாள் கூட்டம்.

பிரசங்கங்களைப்பற்றி வாசிப்பு. "தேசபக்தி" என்ற காந்தியடிகளின் கட்டுரை. காங்கிரஸ் சரித்திரத்திலிருந்து, தேச முன்னேற்றத்திற்கான காந்தியடிகளின் முயற்சிகள்.

எழுத்து:— ஷை விஷயங்களில் குறிப்பு எழுதுதல்.

சரித்திரம்:— காங்கிரஸ் சரிதமும் நாட்டின் நிலையும், காந்தியடிகளின் முயற்சி.

**5th Std.** பொது அறிவு:— அயல் நாட்டின் முன்னேற்றத்திற்கான காரணமும், தன் நாட்டின் வீழ்ச்சியின் காரணங்களையும் அதைச் சீர்செய்யும் விதமும் அறிதல்.



தேசபரிபாலனம்:— மந்திரி சபை அமைப்பு சட்டமைத்திட்டம் இவைகளைத் தர்க்க மூலம் அறிதல்.

தமிழ்:— கல்வி மந்திரியாரின் பிரசங்கத்தைப்பற்றிச் சம்பாஷணை.

வாசிப்பு:— தேசபக்தி என்னும் காந்தியடிகளின் கட்டுரை.

எழுத்து:— ஷை விஷயமாய் ஒரு வியாசம் எழுதுதல். 4ம் வகுப்பில் காங்கிரஸ் சரித்திரத்தை வாசிக்கும்போது குறிப்பு எழுதுதல்.

காங்கிரஸ் சரித்திரமும் காந்தியடிகளின் முயற்சியும், நாட்டின் நிலையும்.

அயல் நாடுகளின் முன்னேற்றத்திற்குக் காரணமும் தன் நாட்டின் வீழ்ச்சியின் காரணங்களையும் அதைச்சீர்செய்யும் விதமும் அறிதல்.

**5th Std.** பூகோளம்:— இந்தியாவின் விளைபொருட்கள். ஏற்றுமதி இறக்குமதி.

சரித்திரம்:— இந்திய வியாபாரத்தின் பழைய உன்னத நிலை வீழ்ச்சி. புதுப்பிக்கப் பெரியோரின் முயற்சி.

தென்னிந்தியா:— உரோமர்—மணிமேகலை—மதுரை

**4th Std.** மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்.

வாசிப்பு:— காந்தியடிகளாரின் ஜீவிய சரித்திரப் புத்தகத்திலிருந்து வாசித்தல, அவர் செய்யும் நன்மைகளைப்பற்றிச் சம்பாஷித்தல்

**5th** வாசிப்பு.— ஷை புஸ்தகத்தை வாசித்து நன்மைகளைக் குறித்துக் கொள்ளுதல்.

## கதரின் சரித்திரம்.

முதன் முதலில் பருத்தியை நூலாக நூற்றுத் துணியாக செய்யுந்தொழிலை கண்டுபிடித்தவர் இந்தியரே ஆவர். கைராட்டினமென்பது நமது பூர்வீக ஜனங்கள் உலகத்திற்கு அளித்த அரும் பெருங்கொடை. ஆசாரியர் ரே: தனக்கு வேண்டிய உணவு அளிக்கும் உழவும் உடையைத்தரும் நெசவும், ஒரு நாட்டின் முக்கிய சொந்தத்தொழில்களாக இருக்கவேண்டும். உயிரைக்காக்க உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்ளுகிறோம். உயரியமானத்தைக் காக்கும் உடைகளுக்காக அந்நியரை எதிர்பார்ப்பது அவமானமன்றோ. கிராமத் தொழிலை உயிர்ப்பதைத்தவிர இந்தியாவின் வறுமையைப் போக்க வேறுமார்க்கமில்லை.

ஒவ்வொரு தேசத்திலும் விவசாயம் செய்தல் என்பது மிக்க அவசியமானது. ஆனால் விவசாயமட்டும் செய்து உருப்பட்ட நாடுகள் தற்காலத்தில் உலகெங்கும் கிடையாது. நிலத்தை உழமுடியாத ஒருவர் நூல் நூற்றல் நெசவு, தச்சுவேலை, கொல்லுவேலை, ஆகிய தொழில்களில் எதையாவது ஒன்றைக் கற்றுக்கொள்ளலாம்.

சரித்திரம்:--ஒரு தேச அரசாங்கமே சுதேசிக் கைத்தொழில்களை ஆதரிக்காவிடில் அந்நாட்டின் செல்வங்களை விருத்தியடைய முடியாது.

எனக்கு தினந்தோறும் எத்தனையோ வேலைகள் தான் இருக்கின்றன. இத்தனைக்கிடையில் அரைமணி நேரமாவது நூற்றுக்கொண்டு தானிருக்கிறேன் என்றார். ஆசாரியர் ரேய்

நகரங்களிலுள்ள உயர் வகுப்பினரையும் கிராமங்களிலுள்ள ஏழை மக்களையும் ஒன்று சேர்ப்பது கதராடைதான்.(C. R.)

பொது அறிவு:—ஒரு கெஜம் கதர் வாங்கினால் அதனால் கிடைக்கும் லாபம் ஏழையின் கையில் போய்ச்சேரும். (மகாத்மா காந்தி)

மங்கையின் கற்பைக் காப்பதும், கணவரை இழந்த பெண்டிற்கு உற்றதுணையும், ஏழைமக்களின் வயிற்றைக் கஞ்சியால் நனைப்பதும் ராட்டினமே.— C. R.

சரித்திரம்:—கைராட்டினத்தைக் கடைப்பிடிக்கும்படி இந்தியாவைத் தூண்டுவது எது? இந்தியாவின் ஏழைமக்களின் அகோரப்பசியாகும். ம. காந்தி.

இந்தியரின் காமதேனு கைராட்டினமே. ராட்டினத்தை அஸ்திவாரமாகக் கொண்டே நம் ஏழைமக்களின் வாழ்க்கை அமைந்துள்ளது. ப. ஜவர்லால்.

பொது அறிவு:— கிராம வாசிகளின் பட்டினியையும் துயரையும் கதரால்தான் நீக்கமுடியும். C. R.

சரித்திரம்:—நீக்க உபாயம். கதர் நமது தேசிய உடை. கதரை உடுத்தி தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்றும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சத்தியமூர்த்தி

இந்தியாவிலுள்ள ஆலைத்தொழிற்சாலைகளால் 20 லக்ஷம் ஜனங்களுக்கு வேலை கிடைக்கலாம். 30 கோடிக்கு மேலான மக்களின் கதி என்ன ஆவது ?—

வார்தா திட்டம் கிராமங்களில் இருக்கும் பாடசாலைகளில் கைத்தொழில்களையும் சேர்த்துப் போதித்தால் ஏழைமாணவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு அனுகூலமாகும். வே. சி. வி.

தேசத்தின் இயற்கை மூலாதாரங்களை ஆராய்ந்து உபயோகிக்கக்கூடிய சக்தியைத் தற்கால கல்வி இன்றைட்டில் சிறுவர் சிறுமிக்குப் போதியதாயில்லை.

கமலாதேவி சட்டோபாத்தியாயர்

தமிழ்:— எழுதலும், வாசித்தலும், மேற்கண்டவைகளை எழுதி வாசித்தல்.

சம்பாஷணை:— தங்கள் ஆசையை எடுத்துச் சொல்லி நயமாக மொழிதல்.

1. தேசபக்தி.
2. தேசசேவை.
3. பெரியாரைப்போல் நடத்தல்.
4. ஆராய்ச்சி.
5. எழுதும் திறமை.
6. நாட்டின் தேவை.
7. ஏழைமக்களின் அனுதாபம்.
8. சுதேச முன்னேற்றத்தைப் பற்றி அறிதல்.
9. சுதேசக் கைத்தொழிலை ஆதரித்தல்.



## II Planning Stage:— சுயநோக்கமுயற்சியின் வளர்ச்சி.

1. நூல் நூற்பதற்கு வேண்டிய சாமான்களைப் பற்றி ஆராய்தல்.
2. பலவித இராட்டைகளைப் பற்றியும் அவைகளின் நன்மைகளை பற்றியும் ஆராய்தல்.
3. பலவித இராட்டைகளைப் புற்றி ஆராய்தல்.
4. இராட்டை செய்யவேண்டிய சாமான்களைப் பற்றியும், அவைகளின் விலையையும் ஆராய்தல். இராட்டை செய்யச்செலவு, வாங்கும் செலவுகளைக் கவனித்து எவ்வித இராட்டை இலாபம் என்று ஆராய்தல்.
5. உபாத்தியாயரின் பழைய இராட்டையில் விசைச்சக்கரம் பூட்டிக் கொஞ்சங்கொஞ்சமாய் நூற்க யோசித்தலும், உபாத்தியாயரின் சம்மதி பெறலும், விசைச் சக்கரம் கிடைக்குமிடமும் விலைகளையும் அறிதல்.
6. தச்சாசாரியிடம் விசைச் சக்கரம் பூட்ட ஏற்பாடு செய்தலும், இராட்டையிலிருந்த கோட்டர் முதலிடவைகளைச் சீர்செய்தலும்,
7. இராட்டைக்கு மாலைக் கயிறு போடலும், நூற்பதில் பல விதங்களை அறிதலும்.
8. நூல் நூற்க ஏற்பாடு செய்தல்.

## இயற்கையாய் உதித்து வரும் பாடவிஷயங்கள்.

4th.— உபகரணம்:— 1. இராட்டை 2. பட்டை போட்ட பஞ்சு. 3 கதர்.

தமிழ் வாசிப்பு:— இராட்டினமென்னும் தலைப்பின் கீழ் குடிநூல் டிசம்பர் சஞ்சிகையிலுள்ளதை வாசித்தல். பலவித ராட்டினங்கள்:— சாதா, விசை, ஆந்திரா, பரோடலி, சபர்மதி.

சித்திரம்:— இராட்டைப் படம் வரைதல்.

தமிழ்:— எழுத்தும் வாசிப்பும் விசைச் சர்க்கா இராட்டையில் அதிகம் முறுக்கு ஏறுகிறது. நூல் அதிகம் நூற்கமுடியும்.

கணிதம்:— 1. ஒரு பெரிய சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றும்பொழுது விசைச் சக்கரம் 10 சுற்றுச் சுற்றுகிறது. பெரிய சக்கரம் 9 சுற்றுச் சுற்றும்பொழுது விசைச்சக்கரம் எத்தனை சுற்றுகள் சுற்றும்?

இராட்டை சம்பந்தப்பட்ட சில மாதிரிக் கணக்குகள்
சம்பந்தத்திற் கேற்றவாறு சில கணக்குகள் போடலாம்.

2. விசைச் சக்கரம் 1 தரம் சுற்றினால் கதிர் 20 சுற்று சுற்றுகிறது. விசைச் சக்கரம் 10 சுற்றுச் சுற்றினால் கதிர் எத்தனை சுற்றுகள் சுற்றும்?

3. ஒரு தரம் பெரிய சக்கரம் சுற்றினால் விசைச் சக்கரம் பத்து தரம் சுற்றும். விசைச் சக்கரத்தின் 1 சுற்றுக்கு 20 தரம் சுற்றும். பெரிய சக்கரத்தின் ஒரு சுற்றுக்குக் கதிர் எத்தனை சுற்றுகள் சுற்றும்?

4. ஒரு இராட்டை செய்யச் செலவு. துண்டுப்பலகை அணா 8 அடிக்கட்டை அணா 4 விசைச் சக்கரம் அணா 8. மொத்தச் செலவு என்ன?

5. ஒரு ஏர்வாடா இராட்டை ரூ. 4–8–0. நம் வகுப்பு மாணவர் 32 பேருக்கு இராட்டை வாங்க என்ன செலவாகும்?

6. ஒரு சாதா இராட்டையின் விலை ரூ 1–7-0 விசைச் சக்கரம் விலை ரூ. 0—8—0. கூலி 0—4 –0 ஆனால் நம்வகுப்பு மாணவர்களுக்கு இராட்டை வாங்க என்ன செலவாகும்?

## 5ம் வகுப்பு.

தமிழ் வாசிப்பு:— குடிநூல் டிசம்பர் சஞ்சிகையில் இராட்டினம் என்னும் வியாசம் வாசித்தல். பலவகை இராட்டினங்கள் சாதா, விசை, ஆந்திரா, பர்டோலி, சபர்மதி முதலியவற்றைப் பற்றி ஆராய்தல்.

சித்திரம் — பலவித இராட்டைகளின் சித்திரம்.

**தமிழ்:— வாசிப்பு, கையெழுத்து, வியாசம்.**

விசை இராட்டையில் சீக்கிரமாய் நூற்கலாம். முறுக்கு அதிகம் ஏறும். சாதா இராட்டையில் நூல் அதிகம் முறுக்கு ஏறுவதில்லை. அதிகமாக நூல் நூற்க முடிவதில்லை. விசை இராட்டையின் அனுகூலத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதல்.

**கணக்கு:—**

1. விசைச் சக்கரம் 10சுற்றுச்சுற்றினால் பெரியசக்கரம் 1 சுற்று சுற்றும். 90சுற்றுகள் விசைச்சக்கரம் சுற்றினால் பெரிய சக்கரம் எவ்வளவு சுற்றுகள் சுற்றும்.

2. கதிர் 20 தரம் சுற்றினால் விசைச் சக்கரம் 1 தரம் சுற்றும். விசைச்சக்கரம் 10தரம் சுற்றினால் கதிர் எவ்வளவு சுற்றுச்சுற்றும்

3. கதிர் 20 தரம் சுற்றினால் விசைச் சக்கரம் 1 தரம் சுற்றும். விசைச்சக்கரம் 10தரம் சுற்றினால் கதிர் எவ்வளவு சுற்று சுற்றும்.

4. கதிர் 200 தரம் சுற்றும் பொழுது விசைச் சக்கரம் எவ்வளவு சுற்று சுற்றும். அப்பொழுது பெரிய சக்கரம் எத்தனை சுற்று சுற்றும்.

5. பர்டோலி சர்க்கா 1க்கு ரூ 5–8–0 நம் வகுப்பிலுள்ள 32 மாணவர்களுக்கு இராட்டை வாங்க என்ன செலவாகும்.

JL
T:5m2116 N23NR
N31.1.3
148785
600008



6. பாலக்காட்டு இராட்டை விலை ரூ. 2–4–0 விலையானால் எவ்வளவு செலவாகும்? இந்த இரண்டுவித இராட்டைகளிலும் எவ்வித இராட்டை மலிவு? எவ்வளவு லாபம்?

7. சாதாரண இராட்டை விலை ரூ. 2–0–0, பர்டோலி இராட்டை ரூ. 3–8–0; பாலக்காட்டு இராட்டைவிலை ரூ. 2–4–0; வகைக்கு 10 இராட்டை வீதம் வாங்க என்ன செலவாகும்.

**தமிழ்:—**

பழைய இராட்டையில் விசைச்சக்கரம் வைத்துப் பூட்டிக் கொள்வோம். விசைச்சக்கரம் திருப்பூர் அகில பாரதா சக்கர சங்கத்தில் ஏராளமாகக் கிடைக்கும். ஒரு விசைச் சக்கரத்தின் கிரயம் ரூ. 0-8–0 ஆகும்.

**சம்பாஷணை:—**

நூல் நூற்பதில் பலவகையுண்டு. ஆந்திர தேச முறையே மேலானது. முதலில் நாம் நூற்கப் பழகுவோம். பிறகு பல முறைகளையும் ஆராய்வோம். நாமும் பட்டை போட்ட பஞ்சை கொண்டு நூல் நூற்போம்.

1. முன் யோசனை, 2. ஆராய்ச்சி, உற்று நோக்கல், 3. சிக்கனம், 4. யுக்தி, 5 சேதமில்லாமற் செய்தல், 6. பழுது பார்த்தல்.

---

**Executing Stage:—**

நூல் நூற்றல்.—

உபாத்தியாயர் பிள்ளைகளைப் பிறை வட்டமாக உட்கார வைத்து முதலில் தானே நூற்றுக் காண்பித்தல்.

2. ஒரு பையன் எல்லோரும் பேசாமல் இருப்பதைவிட, பாடலாம் எனவும், எல்லோரும் பாடவும்.

3. எல்லோரும் நூற்றல். அறுந்து போதல். கடுமையான சத்தம் கேட்டல். சத்தமில்லாமல் நூற்றல சரியான ரகமாய் நூற்றல்.

4. தாங்கள் ஒவ்வொருவரும் எத்தனை மணிநேரம் நூற்றோம். எவ்வளவு நூற்றிருக்கிறோம்? எத்தனை நம்பர் நூல் நூற்றிருக்கிறோம்? என்று பார்த்தல்.

5. உபாத்தியாயர், நூலின் நம்பர் பார்க்கும் விதத்தைக் கற்றுக் கொடுத்தல். பிள்ளைகள் தங்கள் நோட்டில் குறித்துக் கொள்ளுதல்.

ஒவ்வொருவரும் தனியாக நூற்க எத்தனித்தல். நூற்கும்போது அறுந்து போவதைப்பற்றிக் காரணம் வினவுதல். உபாத்தியாயர் மறுபடியும் சுழற்றிக்காட்டல். பெரிய சக்கரம் மெதுவாகச் சுற்றவேண்டும். வேகமாகச் சுற்றக்கூடாது என்று அறிதல். ஏனெனில் பெரிய சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றும்போது கதிர் 168 சுற்றுகிறது. ஆகையால் மெதுவாகச் சுற்றவேண்டுமென்று தெரிந்து, பிள்ளைகள் நிதானமாகவும் சுறுசுறுப்பாகவும் நூல் நூற்றல். ஒருவர் நூற்க மற்றவர் அதையே கவனித்தல்.

## பாட்டு

சூழ்ந்து சக்கரம் சுற்றுவோமே நாம்

என்னும்பாட்டுப் பாடிக்கொண்டே நூலை வேகமாகவும் முறுக்காகவும் நூற்றல். ஒவ்வொருவரும் தனித்தனி கதிர் கொண்டு நூற்றல். அதிகம் சேர்ந்தவுடன் எடுத்து விடல்.

ஒவ்வொருவனும் 4 மணி நேரம் நூற்றோம். நூற்கும் போது ஒரு முழத்திற்கு ஒரு தரம் சுற்றினோம். நாம் ஒவ்வொருவரும் பலவிதமாக நூற்கிறோம். நம்மில் சிலர் நன்கு நூற்றிருக்கின்றனர். சிலர் பருமனாகவும் மெல்லியதாகவும் முறுக்கு கம்மியாகவும் நூற்றிருக்கின்றனர். இவைகளை எப்படிக் கடையில் எடுப்பார்கள் என்று ஆராய்தல். சந்தேகமடைந்து உபாத்தியாயரை வினவுதல்.

**கணக்கு:—** ஒரு ராத்தல் பஞ்சுக்கு 840 கெஜம் நூல் இருந்தால் ஒரு லீ. என்பர். ஒரு ராத்தல் பஞ்சுக்கு 1680 கெஜம் இருந்தால் 2லீ என்பர். ஒரு இராத்தல் பஞ்சுக்கு எத்தனை கெஜ நூல் இருக்கிறதோ அதை 840 கெஜ வீதம் ஈவு படுத்தினால் அத்தனை நம்பர் வரும்.

உதாரணமாக 2 பையன்கள் நூற்ற நூலைச் சேர்த்து நிறுத்தால் $\frac{5}{8}$ இராத்தல் நிறை இருக்கிறது. நூற்ற நூல் 4000 கெஜம் இருக்கிறது. அப்படியானால் ஒரு ராத்தலுக்கு எத்தனை கெஜம் கிடைக்கும் என்று கணக்கிடவேண்டும். அதாவது 6400 கெஜம் ஆகும். அதை 840 கெஜத்தால் வகுக்க 7ம் 21ல் 3 லீ ஆகும். ஏறக்குறைய 8லீ நூல் என்று சொல்லலாம். சாதாரணமாக

$$\frac{\text{நீளம் கெஜம்}}{21 \times \text{தோலா எடை}}$$ இதைக்கொண்டுதான் கணக்கிடவும்.

**கணக்கு:—** lb க்கு எத்தனை கெஜம் நூலிருந்தால் 10லீ என்று கண்டுபிடிக்கலாம்? lb க்கு 5லீ நூல் என்றால் எவ்வளவு நூல் கிடைக்கும்?

ஒரு பையன் 4மணி நேரத்தில் 2100 கெஜம் நூற்கிறான். 8மணி நேரத்தில் எத்தனை கெஜம் நூற்கலாம்? மணிக்கு எவ்வளவு நூற்கலாம்? $\frac{5}{8}$lbக்கு பஞ்சு 2100 கெஜம் நூற்றால் 16ல் 1 பவுண்டு பஞ்சுக்கு எவ்வளவு கெஜம் நூற்கிறான்.

**கணக்கு:—** ஒரு பையன் ஒரு நாளைக்கு 8மணி நேரம் வேலை செய்கிறான். அவன் 4மணி நேரத்தில் 2100 கெஜம் நூற்றால் ஒரு நாளில் எவ்வளவு நூற்பான். ஒரு வாரத்தில் எவ்வளவு நூற்பான்.

16ல்5 பவுண்டு பஞ்சுக்கு 2100 கெஜம் நூற்றால், ஒரு ராத்தலுக்கு எத்தனை கெஜ நூல் நூற்பான். எத்தனை நம்பர் ஆகிறது.

## Judging Stage:—

1. ஒவ்வொருவரும் எவ்வளவு நூல் நூற்றிருக்கிறோமென்று பார்த்தல்.

(a) கணக்குப் பார்க்கும் விதத்தை உபாத்தியாயரிடம் வினவுதல்.

(b) உபாத்தியாயர் அதைப் பூட்டுப் பூட்டாகச் சுற்ற வேண்டுமென்று சொல்லுதல்.

(c) பூட்டு என்றால் என்ன என்று பார்த்தல்.

2. வீசனத்தைப்பற்றிய அளவுகளை வீசனத்தை அளந்து அறிதலும் உபாத்தியாயரிடமுள்ள வீசனத்தில் நூலைச் சுற்றுதலும்

3. ஒவ்வொரு பையனும் 4மணியில் நூற்றதைக் கவனித்தல். மொத்தம் நூற்றதைக் கணக்கிடல்.

4. நூலின் விலையை அறிதலும் தாங்கள் நூற்ற நூலைக் கதர் கடையில் விற்க ஏற்பாடு செய்தலும்.

5. தாங்கள் நூலை விற்ற ஆதாயத்தைக் கணக்கிடல். இந்தத் தொகையை யாது செய்வதென்று யோசித்தல்.

6. தாங்கள் எடுத்துக்கொண்ட காரியம் இனிது முடிந்ததைப் பற்றிச் சந்தோஷமடைதல்.

### கணக்கு:— வாய்ப்பாடு

| | | |
|---|---|---|
| 1 இழை | — | 4 அடி |
| 90 இழை | — | 1 குஞ்சம் |
| 7 குஞ்சம் | — | 1 பூட்டு |
| 10 பூட்டு | — | 1 பொந்து |

பொது அறிவு:— நூலைப் பூட்டாகச் செய்யவேண்டுமானால் வீசனத்தில் சுற்றவேண்டும்.

கணக்கு:— 1 இழை என்றால் என்ன? 1 குஞ்சத்திற்கு எத்தனை கெஜம்? 7 குஞ்சம் என்பது எத்தனை கெஜம்? 1 பூட்டுக்கு எத்தனை கெஜம்? பூட்டுக்கும் நம்பர்க்குமுள்ள சம்பந்தம் என்ன.

அளத்தல்:— வீசனத்தின் அடிப்பலகை 3'2 மூலைக்கும் இடையே உள்ள தூரம 1தரம் சுற்றி அளந்து 4½' நீளம் அறிதல்.

பொது அறிவு:— பலகை, மூளை இவைகளின் வழவழப்பு கைவேலைகளைக் கண்டு ஆனந்தித்தல். ஒவ்வொரு இழையையும் எண்ணிச் சுற்றலும். ஒவ்வொரு குஞ்சத்திற்கும் முடி போட வேண்டும்.

கணக்கு:— 4மணியில் ஒரு பையன் 4 குஞ்சம் 20 இழைகள் நூற்கிறான். ஒரு மணியில் எத்தனை நூற்பான்? 20 பிள்ளைகள் எத்தனை நூற்பார்கள்.

1 குஞ்சம் 120 கெஜமானால் 4குஞ்சம் 20இழை எத்தனை கெஜம்? 20 பிள்ளைகள் நூற்றது எத்தனை? எத்தனை பூட்டு? எத்தனை கெஜம் ஆகிறது? 1பூட்டு ஒரு அணா என்றால் 4ரூபாய்க்கு எத்தனை பூட்டு கிடைக்கும்? நம்முடைய நூலை விற்றால் எத்தனை கிடைக்கும்? ஒரு பூட்டு 8வீ நூல் 1½ அணா என்றால் 40 பூட்டு விலை என்ன?

JL
T:3 M2116, N23 N14
N3



**கணக்கு:—** அனுபவம், கொள் முதல்: விற்றவிலை, ஆதாயம் லாப நஷ்டம்.

**பொது அறிவு:—** ஆதாயத்திற்கு பஞ்சு வாங்கி நூற்க நிச்சயித்தல். இனிமேல் நூற்க ஏற்பாடு செய்து அதற்கு வேண்டிய சௌகர்யம் கிடைக்க ஏற்பாடு செய்தல்.

முற்றிற்று.

600 008
148785

## ஈரோடு லண்டன் மிஷன் போதனாமுறைப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம்.

பழைய மாணவர்களாகிய உங்களுக்கு அறிவிப்பதாவது:— சங்கமென்றால் பல அங்கங்கள் கூடி பங்கமில்லாமல் நடத்துவதே சங்கமாகும். அவ்வாறிருக்க நமது சங்கம் க்ஷீணதிசையை அடையாத படி பாதுகாப்பது நமது கடமையாகையால் பழைய மாணவர் ஒவ்வொருவரும சங்க ஒழுங்குகளை நழுவவிடாமல் தங்கள் சந்தா தொகைகளைக் கிரமமாய் அனுப்பவேண்டியது. இவ்வருஷம் சங்கம் சரிவர நடப்பதற்கு உங்களின் சந்தாவே பெரும் உதவியாக இருக்கிறது. சங்க அங்கத்தினர்களும் நிர்வாக உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து சங்க நடபடிக்கைகளை ஒழுங்க செய்ய அக்டோபர் மாதம் ஓர் கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்திற்கு பழைய மாணவர்கள் ஏதாவது காரியங்கள் இருந்தால் எழுதி அனுப்பலாம். அதில் நமது சங்க விஷயமாக யோசிக்கப்படும்.

நவீன கல்வி என்ற இப்பத்திரிகை நமது நன்மைக்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் சுய நோக்க முயற்சிமுறையின் சகல விஷயங்களும் வருஷம் மூமுறை வெளியாவதால் இதை நீங்கள் வாங்கி வாசிப்பதால் நமது போதனா அறிவைப் புதிப்பிக்க வசதி அளிப்பதோடு சுய நோக்க முயற்சிப் பாடதிட்டமும் எழுத உங்களுக்கு உதவியாகிறது. ஆகையால் இதை நீங்களும் உங்கள் நண்பர்களும் ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். உடனே பத்திரிகைக்கும், சங்கத்திற்கும் அங்கத்தினராகுங்கள், சந்தாவை உடனே அனுப்புங்கள்.

உங்கள் அன்பன்
R. வேதமுத்து.
காரியதரிசி

லண்டன் மிஷன் பில்கிங்டன் பிரஸ், ஈரோடு.